சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்

**தரம் - 12** **கணக்கீடு – 33**

# Covid – 19 இடர் விடுமுறைகால பயிற்சி -

**தேர்ச்சி – 4.4 : வங்கிக் கணக்கிணக்ககூற்றினை தயாரிப்பர் (தொடர்ச்சி)**

வாரம் - 5 **தயாரிப்பு : சஜித்.sp**
**இரத்தினபுரி தமிழ் தேசிய கல்லூரி** **BBA(Financial Spl), University of Colombo**

**7)** கீழே தரப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையின் 2021.03.31 இல் உள்ளபடியான நிதிநிலைமைக் கூற்றில் காட்டப்பட வேண்டிய நிறுவனத்தின் காசுமீதி யாது?

- ✓ 2021.03.31 இல் வங்கிக்கூற்று மீதியின் படி வங்கிமேலதிகப்பற்று ரூபா 200 000
- ✓ 2021.03.31 இல் இன்னமும் வசூலிக்கப்படாத காசோலைகள் ரூபா 720 000
- ✓ 2021.03.31 இல் இன்னமும் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் ரூபா 600 000
- ✓ வாடிக்கையாளரது நேரடி வைப்புக்கள் ரூபா 300 000

**1.** ரூபா 80 000 வரவு
**2.** ரூபா 80 000 செலவு
**3.** ரூபா 380 000 வரவு
**4.** ரூபா 380 000 செலவு
**5.** ரூபா 360 000 வரவு

★ பின்வரும் தகவல்களைக் கொண்டு வினா 8, 9 என்பவற்றுக்கு விடையளிக்க.

சிவானி நிறுவனத்தின் 2021 மார்ச் 31 இல் வங்கிக் கூற்றின்படி வங்கி மேலதிகப்பற்று மீதி ரூபா 83 000 ஆனது காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியுடன் இணங்கியிருக்கவில்லை. இதற்காக ஒப்பீடுகளை மேற்கொண்ட போது பின்வருவன இனங்காணப்பட்டன.

**A-** வைப்புச் செய்து இன்னும் வசூலிக்கப்படாத காசோலை
**B-** வழங்கப்பட்டு இன்னும் மாற்றப்படாத காசோலை
**C-** காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கில் பதியப்படாத வங்கிக் கட்டணம்
**D-** நிலையான கட்டளையின் பேரில் வங்கி பெற்ற பங்குலாபம்
**E-** காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கில் பதிவு இடம்பெறாத மறுக்கப்பட்ட காசோலை
**F-** நிலையான கட்டளையின் பேரில் வங்கி செலுத்திய காப்புறுதிக் கட்டணம்
**G-** காசுக்கட்டுப்பாட்டுக் கணககின் வரவுப் பக்கம் மிகையாகக் கூட்டப்பட்டிருந்தமை

**8)** காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியினைக் காண்பதற்கு வங்கிக் கூற்றின்படி வங்கி மேலதிகப்பற்று மீதியுடன் சீராக்கம் செய்ய வேண்டியவை

**1.** A,B **2.** A,B,E **3.** C,D,F,G **4.** A,B,C,E,G **5.** A,B,C,D,E,F,G

**9)** காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியினை விடவும் வங்க்கூற்று மீதியானது உயர்வாக காணப்படும் சந்தர்ப்பங்கள் ..................................................................................................................

**10)** பைதரன் நிறுவனத்தின் 2021 மே மாதம் தொடர்பான தரவுகள் வருமாறு:

- 2021.05.01 இல் காசுக் கட்டுப்பாட்டு கணக்கு மீதி ரூபா 35 000
- 2021.05.01 இல் வங்கிக்கூற்று மீதி ரூபா 45 000
- 2021.05.01 இல் தேறாத காசோலைகள் மற்றும் மாற்றப்படாத காசோலைகள் முறையே ரூபா 10 000 மற்றும் ரூபா 20 000 ஆகும்.
- மே மாதத்தில் காசுப் பெறுவனவு நாட்குறிப்பேட்டின் மொத்தம் ரூபா 115 000
- மே மாதத்தில் வைப்புச் செய்து தேறிய காசோலைகள் ரூபா 110 000
- மே மாதத்தில் கொடுப்பனவுகளுக்கு வழங்கி சமர்பிக்கப்பட்ட காசோலைகள் ரூபா 85 000

- மே 31 இல் மாற்றப்படாத காசோலைகள் ரூபா 12 000
- வங்கிக் கட்டணங்கள் ரூபா 2 000
- கடன்பட்டோரின் நேரடி வைப்புக்கள் ரூபா 16 000
- நிலையான கட்டளைக் கொடுப்பனவுகள் ரூபா 12 000
- 2021.05.01 இல் தேறாத காசோலைகள் மற்றும் மாற்றப்படாத காசோலைகள் இம் மாதத்தில் தேறியன மற்றும் மாற்றப்பட்டன.

**பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.**

**1)** மே மாதத்தில் காசுப் கொடுப்பனவ நாட்குறிப்பேட்டின் மொத்தம்............................................
**2)** 2021.05.31 இல் திருத்த முன்னரான காசு மீதி...............................................................
**3)** 2021.05.31 இல் திருத்த பின்னரான காசு மீதி...............................................................
**4)** 2021.05.31 இல் வசூலிக்கப்படாத காசோலைகள்.............................................................
**5)** 2021.05.31 இல் வங்கிக் கூற்று மீதி.........................................................................
**6)** மே மாதத்தில் வங்கிக்கூற்றில் செலவு வைத்த மொத்தம்.....................................................
**7)** மே மாதத்தில் வங்கிக்கூற்றில் வரவு வைத்த மொத்தம்.......................................................

ஆ) 2019 டிசம்பர் மாதத்திற்கான சன்டொக் லிமிடெட்டின் வங்கிக் கூற்று கீழே தரப்படுகின்றது.

| திகதி | விபரம் | வரவு | செலவு | மீதி |
|---|---|---|---|---|
| 2019.12.01 | மீதி | | | 16 200 |
| 2019.12.10 | காசுவைப்பு | | 30 000 | 46 200 |
| 2019.12.12 | காசோலை 300510 | 24000 | | 22 200 |
| 2019.12.14 | காசோலை வைப்பு 800780 | | 8 800 | 31 000 |
| 2019.12.18 | பங்குஇலாபம் | | 7 000 | 38 000 |
| 2019.12.19 | காசோலை 300512 | 12 000 | | 26 000 |
| 2019.12.20 | காசோலை வைப்பு 600878 | | 6 000 | 32 000 |
| 2019.12.20 | திரும்பிய காசோலை 600878 | 6 000 | | 26 000 |
| 2019.12.24 | காசோலை 300513 | 10 000 | | 16 000 |
| 2019.12.25 | வங்கிக்கட்டணம் | 1 000 | | 15 000 |
| 2019.12.27 | நிலையான கட்டளை காப்புறுதி | 7 000 | | 8 000 |
| 2019.12.31 | 31.12.2019 இல் மீதி | | | 8 000 |

**மேலதிக தகவல்கள்**

1) 2019.11.30 இல் வங்கிக்கூற்று மீதியும் காசுக்கணக்கு மீதியும் வேறுபட்டுவதற்கு காரணமாக வசூலிக்கப்படாதிருந்த காசோலை 600878 ரூபா 6000 ஆகும்
2) இக்கூற்றை நாட்குறிப்புடன் ஒத்துப் பார்த்து கீழே காட்டப்பட்டுள்ள காசோலை வழங்கல் மற்றும் வைப்புக்கள் வங்கிக் கூற்றில் காணப்படவில்லை என கணக்காளர் அறிவித்தார்.

| | | |
|---|---|---|
| காசோலை வழங்கல் | 300 511 | ரூபா 13 000 |
| | 300 514 | ரூபா 7 000 |
| காசோலை வைப்பு | 801 201 | ரூபா 15 000 |

3) விற்பனைக்காசோலைப் பெறுவனவு (800780) ரூபா 8,800 ரூபா காசுப்பெறுவனவு நாளேட்டில் ரூபா 800 ஆகப் பதியப்பட்டிருந்தது.
4) பங்கு இலாபம் வங்கிக் கட்டணம், நிலையியல் கட்டளை என்பன காசுக்கணக்கில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

**வேண்டப்படுவது :**

1) 2019 டிசம்பர் மாத காசுக்கணக்கு
2) 2019 டிசம்பர் மாத காசுக்கணக்கை திருத்தம் செய்க?
3) 2019 டிசம்பர் மாத வங்கிக்கணக்கு இணக்கக்கூற்று?